# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஓகத்து மாதம் 21 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 19/2007

### வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங் களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, வண.முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "வண. முணமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம் ; அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

2-PL 003907 -1,040 (2009/06)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) பன்னல, யட்டிகல்லொலுவ, ஸ்ரீ புண்ணிய வர்தனாராமயவின் பிரதம குருக்களான காலஞ் சென்ற வண. மூணமலே தம்மரதன தேரரின் ஞாபகார்த்தமாக அவரின் உருவச்சிலை ஒன்றை அமைத்தல், அவரது பெயரின் ஞாபகார்த்தமாக சமய மற்றும் ஏனைய விழாக்களை ஒழுங்குசெய்தல், வண. மூணமலே தம்மரதன தேரரின் வாழ்க்கையைப் பற்றி மக்கள் விளங்கிக்கொள்வதற்கான நடவடிக்கை களை ஒழுங்குசெய்தல் ;

(ஆ) பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் பாலர் பாடசாலைகள், பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள், சிறுவர் கல்வி, மதக் கல்வி சம்பந்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(இ) வறுமை மற்றும் வேறு இயலாமைகளின் காரணமாகத் தங்கள் கல்வியைத் தொடர இயலாதிருக்கும் இலங்கைப் பௌத்த மாணவர்களின் நலனையும் நன்மைகளையும் முன்னெடுத்துச் செல்ல உதவுதல் ;

(ஈ) பௌத்த இளைஞர்களுடைய கல்வி அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் அவசியமான வகுப்புகள், விரிவுரைகள், நூலகங்கள், கருத் தரங்குகள், மாநாடுகள் செயலமர்வுகள், உரையாடல் கள், கருத்துப்பரிமாற்றங்கள், கல்விச் சுற்றுலாக்கள், காட்சிப்பொருட்கள் என்பவற்றை நடாத்துதலும் செய்தித்தாள்கள், அத்துடன் சஞ்சிகைகள் என்ப வற்றை வெளியிடுதலும் ;

(உ) பௌத்த மதத்தை அனுசரிக்கின்ற உடல், உள ஊனமுற்ற வறியவர்கள், முதியோர், அனாதர வானோர் மற்றும் ஆதரவற்றோர் ஆகியோரின் நலன்கருதி உதவி மற்றும் வீடமைப்பு போன்ற நிவாரண சேவைகளை வழங்குதல் ;

(ஊ) பௌத்த இளைஞரை ஆக்கபூர்வமான சேவைகளில் அமர்த்துவதற்காக மொழிப்பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சிநெறிகளை அங்குரார்ப்பணம் செய்தலும் மேலதிக உதவி என்றவகையில் வருமானம் உண்டு பண்ணும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதியளித்தலும் ;

(எ) சிறுவர் சுகாதாரம் மற்றும் வளர்ந்தோர் சுகாதாரம் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துதலும் நோய்க்கட்டுப்பாடு பற்றிய கல்வி புகட்டு தலும் பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களின் சமுதாய நலனை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் பிணி ஆய்வுகூடங்கள், உடற்பயிற்சி அரங்குகள், மருத்துவக்கூடங்கள் என்பவற்றை நடத்துதலும் ;

(ஏ) பௌத்த மதத்தை அனுசரிக்கின்ற குறைந்த வருமானம் ஈட்டும் கூட்டத்தினரிடையே சமூக அபிவிருத்திக்காக சுயஉதவி மற்றும் வலிந்துதவும் சேவைகளை வழங்கு தலும் இது தொடர்பில் பரீட்சார்த்த கருத்திட்டங் களைப் பேணுதலும் அங்குரார்ப்பணம் செய்தலும் ;

(ஐ) ஏதேனும் கைத்தொழிலில் அல்லது வியாபாரத்தில் அல்லது ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தில் ஈடுபடுத்துதலும், விவசாய, கைத்தொழில் மற்றும் வர்த்தகத் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் பௌத்த மதத்தை அனுசரிப் பவர்களுக்குத் துணையும் உதவியும் புரிதலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் விசாலிப்பு சேவைகளையும் பொறுப்பேற்றலும் தொழிநுட்பவியல் கைமாற்றம் தொடர்பில் பிரசார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தலும் ;

(ஒ) யட்டிகல்ஒலுவ, பன்னல, ஸ்ரீ புண்ணியவர்தனாராமய வுக்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தலும், பேணுதலும் ;

(ஓ) பௌத்த பொது நிலையினரின் மதக்கல்வியை ஊக்குவித்தல் ;

(ஔ) யட்டிகல்ஒலுவ, பன்னல, ஸ்ரீ புண்ணியவர்தனா ராமயவின் வதிவுள்ள பிக்குகளுக்கு கல்வி வசதிகளை வழங்குதலும் அவர்களது அன்றாடத் தேவைப்பாடு களைக் கொடுத்துதவுதலும் ;

(க) யட்டிகல்ஒலுவ, பன்னல கிராமத்திலும் ஸ்ரீ புண்ணியவர்தனாராமயவிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள இடப்பரப்பிலும் புராதனக் கலைவடிவங்கள் உட்பட கலாசார நடவடிக்கை களை ஊக்குவித்தல்;

(ங) சர்வதேசரீதியில் தம்மவைப் பரப்புதலில் ஈடுபடுதல்;

(ச) பௌத்த கோட்பாட்டையும் பௌத்த வாழ்க்கை முறையையும் பேணிப்பாதுகாத்தலும் பரப்பு தலும் ;

(ஞ) இலங்கையிலும் வெளிநாட்டிலுமுள்ள ஏனைய பௌத்த ஒழுங்கமைப்புகளுடன் நட்புறவை தாபித்தல் ; அத்துடன்

(ட) பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்குவதன்மூலமும் பௌத்த மதக் கல்விக்கு பிரிவேனாக்களைத் தாபிப்பதன்மூலமும் பேணுவதன்மூலமும் பௌத்தமதத்தை ஊக்குவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய தலைவரையும் துணைத் தலைவர்களையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையத் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு பதவி தாங்குநர்களைக் கொண்ட முகாமைச்சபையொன்றால் (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த மன்றத்தின் சபை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வருவன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவங்களை உடையதாதல் வேண்டும்:–

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக் கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்துமாற்றல் அல்லது வேறுவகையில் பாராதீனப்படுத்தல், பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்மூலமோ அல்லது முகவர்மூலமோ செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், அன்பளிப்புக்களையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடுசெய்தலும், ஏதேனும் வங்கியில் நடைமுறை வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின்மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தை கடனாகப் பெறுதல் அல்லது முதலீடுசெய்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவி நீக்குதலும், அவர்களின் சேவைக்காலத்தையும் நிபந்தனைகளையும் விதந்துரைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையைக்கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்குமான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக் குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களைத் தேர்ந் தெடுத்தல், அவர்கள் பதவிவிலகுதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ;

(இ) சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அதன் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் தொடர்பான கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியின் கட்டுக்காப்பும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்பட லாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*உறுப்பினர் பெயர்ப் பதிவேடு.*

**7**. சபை இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற ஒவ்வோராளினதும் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற ஒவ்வோராளினதும் இடாப்பொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, நன்கொடை, மரணசாதன ஆதன அளிப்பு, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) சபை அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளின் கணக்காய்வு.*

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(i) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ;

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தலைவர், செயலாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும், செயலாளரினதும் அல்லது சபையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலரினதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச் சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனுமாள் கையொப்பமிடுவதினின்று தனிவேறான தாதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப் படவுள்ள தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப் படவுள்ள தனிசுகளும்.

**11**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.

**12**. எவ்விடத்திலிருந்தேனும் பெறப்பட்ட கூட்டுத்தாபனங்களின் பணங்களும், ஆதனமும் இதனகத்து எடுத்துக்காட்டப்பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் என்றவகையில் அல்லது எத்தன்மைத்தாயினுமான வேறுவகையில் கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொடுக்கப்படுதலாகாது.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபன மானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகிய வற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசை வற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத் தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் கலைக்கப்படு வதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் செலுத்தித்தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுத லாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை, அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று, அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்